**அடிப்படை சமூக சேவைகளை இலக்கிடுகின்ற அவசர பிராந்தியத்தின் முன்னேற்றத்திற்கான செயற்திட்டம் -2014**

---

அடிப்படை சமூக சேவைகளை இலக்கிடுகின்ற அவசர பிராந்தியத்தின் முன்னேற்றத்திற்கான செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் முகவருக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட 2012 மார்ச் 28 ஆம் திகதிய எஸ்எல்பீ – 105 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4(6) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

கடன் உடன்படிக்கையின்படி அடிப்படை சமூக சேவைகளை இலக்கிடுகின்ற அவசர பிராந்தியத்தின் முன்னேற்ற செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் தேசிய திட்டமிடல் திணைக்களம் உள்ளதுடன், சுகாதார அமைச்சு மற்றும் கிழக்கு வடமேல் மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபை என்பன அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. செயற்திட்டத்தின் நோக்கங்களாவன, சுகாதார மற்றும் மருத்துவ முறைமையை முன்னேற்றுதல் மற்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் இரண்டாம் தர வைத்திய சாலைகள் மற்றும் அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனம் என்பவற்றில் வசதிகள் மற்றும் உபகரணங்களை முன்னேற்றுவதினூடாக அத்தியாவசிய மருந்துகளின் உற்பத்தி இயலளவை பலப்படுத்துதல் மற்றும் தொற்றல்லாத நோய்களின் முகாமைத்துவத்தினை மேம்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 6,332 மில்லியனிற்குச் சமனான ஜப்பான் யென் 4,760 மில்லியனானதுடன், அதில் ரூபா 5,155 மில்லியனிற்கு சமனான ஜப்பான் யென் 3,935 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவரால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 2012 யூலை 23 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 யூலை 23 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று பட்டியல்படுத்தப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில்

கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும்

பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற் திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்பதிகரமாக கணக்கினக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் எழும் சீராக்கங்களின் தாக்கத்தினை தவிர்த்து

(அ) செயற்திட்டமானது 2014 ஏப்ரல் 30 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 ஏப்ரல் 30 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்
நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு**

மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 98,469,221 கூட்டுத்தொகையான நேரடிக் கொடுப்பனவுகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதிக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டு மற்றும் 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள் என்பன தொடர்பாக சில முக்கிய புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியனிக்க உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டில் | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன |
| ஜேஐசீஏ | 3,935 | 5,155 | 1,703 | 787 | 1,004 | 1,035 | 1,326 |
| ஜீஓஎஸ்எல் | 825 | 1,177 | 314 | 142 | 203 | 145 | 238 |
| மொத்தம் | 4,760 | 6,332 | 2,017 | 929 | 1,207 | 1,180 | 1,564 |

பண அளிப்பும் பட்டியல்களின் படி, ரூபா 5,155 மில்லியனிற்குச் சமனான ஐப்பான் யென் 3,935 தொகை 2012 தொடக்கம் 2019 வரையான ஆறு ஆண்டுகளிற்கிடையில் பயன்படுத்தப்பட எதிர்பார்க்கப்பட்டதுடன் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தினூடாக பாதீட்டு மதிப்பீடுகள் மூலம் 2014 ஆம் ஆண்டிற்காக செயற்திட்டத்திற்கு ரூபா 1,703 தொகை வழங்கப்பட்டதுடன் அதில் ரூபா 1,326 மில்லியனிற்குச் சமனான ஐ.யென் 1,035 மில்லியன் செயற்திட்டத்தால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. இது முன்னைய ஆண்டுகளில் நிதிகளின் பயன்பாட்டில் மெதுவான முன்னேற்ற அறிக்கையிடப்பட்டதைச் சுட்டிக்காட்டுகின்றது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி களுவாஞ்சிக்குடி, வறக்காபொல மற்றும் தெல்தெனிய வைத்தியசாலைகளின் நிர்மாண வேலைகளில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் முறைமையே 56 சதவீதம் 67 சதவீதம் மற்றும் 48 சதவீதம் ஆகும். அவற்றில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உண்மையான பௌதீக முன்னேற்றம் முறையே 41 சதவீதம் 39 சதவீதம் மற்றும் 36 சதவீதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இது எதிர்பார்க்கப்பட்ட மட்டங்களைவிட குறைவானதாகும்.

### 3.3 நிதிக் கட்டுப்பாட்டில் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம், ரூபா 3,838,048 பெறுமதியான செயற்திட்டத்தின் சொத்துக்களின் உள்ளதன்மை மெய்மையாய்வு செய்ய இயலக்கூடிய வகையில் மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குறித்த காலப்பகுதியினுள் ஏற்பாடு செய்யப்பட்ட வளங்களை உபயோகித்து செயற்திட்ட நோக்கங்களின் அடைதலை உறுதிப்படுத்துவதற்காக பொறுப்புக்களை நிர்ணயித்து மாதாந்த காலாண்டு அரையாண்டு ரீதியான நிதி மற்றும் பௌதீக இலக்குக்களை தெளிவுபடுத்தி முழுச் செயற்திட்டக் காலப்பகுதிக்குமான முழுமையான நடவடிக்கைத்திட்டம் இருக்க வேண்டும் என்ற போதிலும், செயற்திட்டத்தால் அத்தகைய திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.